| | | |
|---|---|---|
| சாட்சி : PW1 – சந்திரசேகரன், த/பெ அஞ்சமகாத்தான். | அ.வ.எண்.120/2012 | 09.02.2026 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4)நான் வழக்குரையில் உள்ள சொத்து விவரத்தின்படி பரிகாரம் கோருகிறேனா அல்லது வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தின்படி பரிகாரம் கோருகிறேனா என்றால் வழக்குரையின் சொத்து விவரத்தின்படி பரிகாரம் கோருகிறேன். தாவா 1வது அயிட்ட சொத்தில் கிழமேல் 112 அடி, தென்வடல் 50 அடி என்பதை எதன் அடிப்படையில் நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் அனுபவத்தில் உள்ளதை சொல்லியுள்ளேன். தாவா 2வது அயிட்ட சொத்திற்கும் கிழமேல் 53 அடி, தென்வடல் 2 அடி ஆக்கிரமிப்பு என்று வழக்குரையில் கண்டுள்ளதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

5) வழக்கு போடுவதற்கு முன்பாக எனது அனுபவத்தில் இருந்தது தற்போது பிரதிவாதியின் அனுபவத்தில் இருக்கிறது. மேற்படி ஆக்கிரமிப்பு எப்போது ஏற்பட்டது என்றால் 2010 முதல் 2012 வரையிலான காலக்கட்டத்தில் ஏற்பட்டது. பிரதிவாதிகள் மேற்படி காலக்கட்டத்தில் ஆக்கிரமிப்பு செய்து சன் சேடு வைத்துள்ளார்கள். சன்சேடானது பிரதிவாதிகளின் வடபுறம் உள்ள சுவரில் உள்ளது என்றால் சன்சேடை பொது சுவரில் வைத்துள்ளார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

6) நீ.ம.சா.ஆ.2 அறிக்கையில் பொதுசுவர் காணப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை தவறானதாகும். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஏதாவது ஆட்சேபனை

தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது தான் அது பற்றி எனக்கு தெரிகிறது. எனது வழக்கறிஞர் அது பற்றி என்னிடம் சொல்லவில்லை.

7) என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்தில் பிரதிவாதிகளின் தென்புற அளவுகள் பிரதிவாதியின் அத்திலிருந்து L1 வரை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் கிரையப்பத்திரத்தின்படி கீழ்புறம் தென்வடல் 35 அடி என்றாலும், அதில் 33–1/4 அடி தான் கட்டுமானம் உள்ளது என்றாலும் மீதியுள்ள இடம் பிரதிவாதிகள் காலியாக விட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) எனது வழக்குரை 4 வது பாராவில் வீட்டின் வடபுறம் சுவரை இடித்து கொள்ளவும், சுவரில் பொருத்தியுள்ள ஓட்டு தாள்வாரம் மற்றும் ஓடுகளை அகற்றி கட்டுமானத்திற்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பிரதிவாதிகளை ஓடுகளை அகற்றிவிட்டு சுவற்றை இடித்துவிட்டு கட்டுமானம் செய்ய பிரதிவாதிகளை அனுமதித்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பொதுசுவர் எதுவும் இல்லை என்றாலும், அதனால் தான் நீதிமன்ற ஆணையர் பொது சுவர் இருந்ததாக காணப்படவில்லை என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் தாவா 2 வது அயிட்ட சொத்தில் கிழமேல் 53 அடி தென்வடல் 2 அடியாக பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், எவ்வாறு 53 அடி என கணக்கிட்டுள்ளேன் என்றால் சந்தில் உள்ள 3 அடியும் சேர்த்து தான் 53 அடி என்று சொல்லியுள்ளேன்.

9) பிரதிவாதிகளுக்கு சொந்தமான வடபுற சுவற்றில் தான் ஜன்னல் வைத்து சன் சேடு அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், 33–1/4 அடி கட்டுமானத்திற்குள் தான் மேற்படி ஜன்னல் மற்றும் சன் சேடு உள்ளது என்றாலும், வடபுறம் பிரதிவாதிகளுக்கு மீதி 1–3/4 அடி உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்திற்கு ஆக்கிரமிப்பு பரிகாரம் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை ஆதாரமாக வைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் அளவீடுகள் எதுவும் இல்லை என்றாலும், அதனால் வழக்குரையில் வா.சா.ஆ.1 ல் இல்லாத அளவுகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

10) வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விவரத்திற்கும், வா.சா.ஆ.1 ல் சொத்து விவரத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 க்கும், வழக்குரையில் உள்ள சொத்துவிவரத்திற்கும் இடையில் முரண்பாடு உள்ளது என்றால் சரிதான். முரணான சொத்துவிவரத்திற்கு நான் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு முதலில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பரிகாரத்திற்கு நீதிமன்ற ஆணையர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருந்த போது தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி முதல் நிலை அறிக்கையான நீ.ம.சா.ஆ.1 ஐ நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

11) நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் எனது சொத்தை அடையாளம் காண முடியவில்லை என அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எனது வீட்டிற்கு தென்புறம் பொதுசுவர் எதுவும் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் அவர்களது எல்லைக்குட்பட்டு தான் வடபுறத்தில் சுவர் அமைத்துள்ளார்கள் என்றாலும் நான் சொல்வது போல் தாவா 2வது அயிட்ட சொத்து என்பது நிலத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள திருத்தல் வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், எனவே எனக்கு மேற்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

12) பிரதிவாதிகள் தாவா சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஆவணங்கள் இன்றி அனுபவத்தின் பேரில் தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் ஆவணத்திற்கு முரணாக உள்ளதால் விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்க வேண்டுமெனில் சரியான அளவுகள் குறிப்பிட்ட உரிமை மூல ஆவணத்தின்படி தான்கோர முடியும் என்றாலும், அனுபவத்தின் பேரில் வழக்குரையில் கற்பனையாக குறிப்பிட்டுள்ள அளவீடுகளுக்கு விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். நான்

கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**Signed,**

**சந்திரசேகரன்**

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**இலால்குடி.**